

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஆகஸ்டு 02, 2018 | புரட்சி 17 | முழக்கம் 29 | விலை: ரூ.3.00

# ஒரு நாத்திகரின் 75 ஆண்டு பொது வாழ்வுப் பயணம்

75 ஆண்டுகால பொது வாழ்க்கை; 50 ஆண்டு காலம் ஒரு அரசியல் இயக்கத்துக்குத் தலைமை என்பது வரலாற்றில் எப்போதாவது நிகழும் ஒரு அபூர்வ நிகழ்வு. இந்து பார்ப்பனியம் கட்டமைத்த ஜாதிய ஒடுக்குமுறை சமூக அமைப்பில் கடைக்கோடிப் பிரிவில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு சமூகத்தின் இளைஞர் - சமூகத் தடைகளைக் கடந்து அரசியல் அதிகாரத்தை எட்டிப் பிடித்ததே மகத்தான சாதனைதான். அந்த சாதனைக்குப் பெயர் கலைஞர்! இதையே தனது சமூகப் புரட்சித் தொண்டுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி என்று பூரித்தவர் பெரியார். அந்த சாதனையை சமூகத்துக்குப் பிரகடனப்படுத்தவே கலைஞருக்கு சிலை வைக்க வேண்டும் என்ற பெரியார், அதற்கு தனது சொந்த நிதியை வழங்க முன் வந்தார்.

இது சூத்திரர்களால் - சூத்திரர்களுக்காக நடக்கும் ஆட்சி என்று சட்டமன்றத்திலே ஒரு முதல்வராக கலைஞர் பிரகடனம் செய்தபோது, அது 'சூத்திர இழிவு' ஒழிப்புக்கான பெரியாரின் களப்போருக்கு சூட்டப்பட்ட மகுடம் என்றே சொல்ல வேண்டும். அதே சூத்திர இழிவு ஒழிப்புக்காக 'கோயில் கர்ப்ப கிரகத்தில்' நிலைநிறுத்தப்பட்டிருந்த சூத்திர இழிவை ஒழிக்க பெரியார் போர்க் கொடி தூக்கியபோது, அந்த இழிவை அகற்றிட அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகராக்கி பார்ப்பனரின் பிறவி ஆதிக்கத்தைப் புரட்டிப் போடும் சமூகப் புரட்சி தீர்மானத்தை சட்டமன்றத்தில் கொண்டு வந்து அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவோடு அதை நிறைவேற்றி, சூத்திர இழிவு ஒழிப்பு சரித்திரத்தில் மற்றொரு சாதனையைப் படைத்தவர் கலைஞர். "கர்ப்பகிரகம் பாதுகாக்கப்பட வேண்டியதுதான்; ஆனால் அது வர்ணாஸ்ரமப் பாதுகாப்பாக இருக்கக் கூடாது" என்று சட்டமன்றத்தில் அறிவித்தார். இந்திய தேசியப் பார்ப்பன அதிகாரத்தின் முன் இந்த 'சூத்திர இழிவு' ஒழிப்பு இன்னும் வெற்றி பெற முடியவில்லை.பார்ப்பனிய அதிகாரம் இப்போதும் எவ்வளவு வலிமை பெற்று நிற்கிறது என்பதற்கு இது சான்று.



இத்தகைய 'இந்திய தேசியம்' எனும் பார்ப்பன-பனியா கட்டமைக்குள்ளே செயல்பட வேண்டிய ஒரு மாநில அரசு என்ற எல்லைக்குள்ளேதான் ஒரு மாநில முதல்வராக 'பார்ப்பனிய' சமூகக் கட்டமைப்புகளை சீர்குலைக்கும் திட்டங்களை கலைஞர் முனைப்போடு முன்னெடுத்தார். அடித்தள மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களான கை ரிக்ஷா ஒழிப்பு, குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம், பெண்களுக்கு சொத்துரிமை, உள்ளாட்சித் துறைகளில் பெண்களுக்கு 33 சதவீத ஒதுக்கீடு, கணவனை இழந்த பெண்களுக்கு நிதி உதவி, பிச்சைக்காரர் மறுவாழ்வு, திருநங்கை நல வாரியம் என்று இந்த பட்டியல் நீளும். நிலஉச்ச வரம்பை 15 ஏக்கராகக் குறைத்தல், தனியார் பேருந்துகள் அரசுடைமை, தஞ்சை பெரும் பார்ப்பன பண்ணையார்கள் விவசாயக் கூலிகள் மீது நிகழ்த்திய ஒடுக்குமுறைகளிலிருந்து அவர்களை விடுவித்த விவசாயத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம், விவசாயத்துக்கு இலவச மின்சாரம், பெரியார் சமத்துவபுரம், பெரியாருக்கு அரசு மரியாதை, தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்ற அரசு அறிவிப்பு என்று நீண்ட பட்டியலிட முடியும்.

சமூக நீதித் துறையில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், இஸ்லாமியர், அருந்ததியினருக்கு தனி ஒதுக்கீடுகள், கிராமப்புற மாணவர்களுக்கு தனி ஒதுக்கீடு, ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டோருக்கு தனி ஒதுக்கீடு, முதல் தலைமுறையாக பட்டதாரியாக படிக்க வரும் மாணவர்களுக்கு (அவர்கள் முன்னேறிய சமுதாயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும்) கூடுதல் மதிப்பெண் என்ற திட்டங்களை அறிமுகப்படுத்தியதும் அவர்தான்.பார்ப்பனிய அதிகாரக் கட்டமைப்புக்கு எதிராக அவர் ஆட்சி அதிகாரத்தைக் கருவிகளாக்கிய இந்த 'சமூக நீதித் திட்டங்கள்' வெற்றிகளையும் தோல்விகளையும் சந்தித்திருக்கின்றன. 'ஏன் வெற்றி பெற்றுக் காட்டவில்லை; கலைஞர் தோற்றுவிட்டார்' என்று குற்றம் சாட்டுவது, இந்திய பார்ப்பன அதிகார மய்யத்தின் கொடூரங்களைப் புரிந்து கொள்ளாதவர்களாக இருக்க வேண்டும். அல்லது புரிந்து கொண்டு நடிப்பவர்களாக இருக்க வேண்டும்.

ஒரு தலைவரின் அய்ம்பது ஆண்டுகால அரசியல் பயணத்தில் நிச்சயமாக சறுக்கல் சரிவுகள் இல்லை என்று எவருமே நியாயப்படுத்த முடியாது. உண்மைதான் சறுக்கல்களும் உண்டு; அதே நேரத்தில் 'உலகமயமாக்கல்' என்ற கொள்கை இந்திய பார்ப்பன அதிகார அமைப்பால் புகுத்தப்பட்ட பிறகு அரசியலிலும், சமூகத்திலும் இது உருவாக்கிய சீரழிவுகள் ஏராளம். சுரண்டல், ஊழல், மக்கள் நலனுக்கான அரசுகள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு தங்கள் அதிகாரங்களை 'தாரை வார்த்தல்' சீரழிவுகளை கவனத்தில் கொண்டு, அதன் பின்னணியில் சாதனைகளையும் சறுக்கல்களையும் எடை போடுவதே சரியான மதிப்பீடாக முடியும்.

அது மட்டுமல்ல; கடவுளை மதத்தை மறுத்த ஒரு நாத்திகர், 95ஆவது வயது வரை வாழ்ந்து, கடவுள் மத மறுப்புக் கொள்கைகளுக்கு பெருமை சேர்த்திருக்கிறார்.

மரணத்தைத் தடுத்து நிறுத்தும் அறிவியலை இன்னும் மனித சமூகம் எட்டவில்லை. எதிர்கால அறிவியல் அதை சாதித்துக் காட்டும்; ஆனாலும் 95 வயது வாழ்ந்து காட்டிய மனிதரின் பிரிவு, காலம் கடந்தாவது நிகழ்ந்துதானே தீரும். அதற்காக கலங்குவதோ, கண்ணீர் விடுவதோ உணர்வுகளின் வெளிப்பாடாக இருந்தாலும் அதைக் கடந்து செல்ல வேண்டும் என்பதே இயற்கையின் நியதி; அதுவே பகுத்தறிவுப் பார்வை. மகத்தான மனிதர்களின் உடல்கள் இல்லாமல் போனாலும் அவர்களின் சிந்தனைகளும் செயல்களும் அவர்களின் இருத்தலை உறுதி செய்து கொண்டே இருக்கும்.

சமூக விடுதலை என்பது - இந்த நாட்டில் பார்ப்பனியத்துக்கும் பார்ப்பன அதிகாரத்துக்கும் நேர் எதிரான 'சுயமரியாதை மானுடம்' நோக்கிய புரட்சிகர மாற்றத்துக்குள்தான் சூல் கொண்டு நிற்கிறது. சமூக நீதி, ஜாதி ஒழிப்பு, பகுத்தறிவு, பெண் விடுதலை, சமத்துவம் அனைத்துமே அதில் அடங்கியிருக்கிறது. இந்தப் பாதையில் தனது அதிகாரங்களைக் கொண்டு செலுத்தும் முயற்சிகளில் கலைஞர் முதல்வராக செயல்பட்டிருக்கிறார். ஆட்சிகளைப் பணிய வைக்கும் முயற்சிகளில் எதிர்கட்சித் தலைவராகப் போராடியிருக்கிறார்.

இந்த 'எதிர்நீச்சலில்' தடம் புரளாது எதிர்காலத்தில் கலைஞர் கட்டிக் காத்த இயக்கம் பயணிப்பதோடு மட்டுமல்ல; அதை மேலும் கூர்மையாக்கி விரைவுபடுத்த வேண்டும். அதைத் தான் வரலாறு கோரி நிற்கிறது. அதில்தான் கலைஞரின் பெருமையும் உயிர்ப்பும் தங்கி நிற்கிறது.

**('நிமிர்வோம்' தலையங்கம் ஜூலை 2018 இதழ்)**

*தா.மோ. அன்பரசன், ஆர்.எஸ்.பாரதி தவறான முன்னுதாரணம்*

## பிரார்த்தனை – வழிபாடுகள் நடத்தி கலைஞர் கொள்கையை அவமதிக்க வேண்டாம்

*திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி அவர்கள், கலைஞர் உடல்நலம் பெற பிரார்த்தனை போன்ற மூடநம்பிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்ற வேண்டுகோளை விடுத்திருக்கிறார். சரியான நேரத்தில் விடுக்கப்பட்டவேண்டுகோள் இது. வாழ்நாள் முழுதும் நாத்திகராக வாழ்ந்து வரும் ஒரு தலைவருக்காக இப்படி பிரார்த்தனை போன்ற மூடநம்பிக்கைகளில் ஈடுபடுவது கலைஞரின் கொள்கைக்கு இழைக்கும் துரோகமும் அவமதிப்பும் ஆகும்.*

*சில பார்ப்பன ஊடகங்கள், இப்படிப்பட்ட ‘பிரார்த்தனை’கள் நடத்தப்பட வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு செய்திகளை உருவாக்கி வருகின்றன. குறிப்பாக ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு திருவாரூரில் கலைஞர் படித்த பள்ளியின் மாணவர்களும் ஆசிரியர்களும் பள்ளி மைதானத்திலேயே (கோயிலில் அல்ல) ‘கூட்டு பிரார்த்தனை’யை அவர்கள் நம்பிக்கை அடிப்படையில் நடத்தியதை வெளியிட்டு தமிழகம் முழுதும் தி.மு.க.வினர் வழிபாடுகளை நடத்துவதாக ஒரு கற்பனையை செய்தியாக உருவாக்கிப் பரவ விட்டது. இந்து மக்கள் கட்சியைச் சார்ந்த அர்ஜூன் சம்பத் என்பவர் கலைஞரை நலம் விசாரிக்கச் செல்வதாகக் கூறி கோயில் பிரசாதங்களை எடுத்துப் போய் வழங்கி பண்பாடற்ற முறையில் நடந்து கொண்டார். ஒரு வைதீகர் இறப்பில் கடவுள் மறுப்பாளர்கள், ‘ஆன்மா, கடவுள்’ மறுப்பு நூல்களைக் கொண்டு போய் வழங்கினால் அதை ஏற்பார்களா? பகுத்தறிவாளர்கள் அத்தகைய பண்பாடற்ற செயல்களில் ஒரு போதும் ஈடுபட மாட்டார்கள்.*

*காவேரி மருத்துவமனை முன்பு எவரோ ஒருவர் ‘பூசணிக்காயை’ச் சுற்ற, உடனே ஊடகங்கள் அதைப் பெரிதாக ஒளிபரப்பத் தொடங்கிவிட்டன. தி.மு.க. மாவட்ட செயலாளர் தா.மோ. அன்பரசன், மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி கூட்டுப் பிரார்த்தனையில் அமர்ந்து தங்கள் ‘பக்திப் பரவசத்தை’ வெளிப்படுத்தியிருப்பதை ஊடகங்கள் ஒளிபரப்பின. இந்த செயல் கலைஞர் கொள்கையை அவமதித்ததாகவே கருத வேண்டும். கடந்த 10 ஆண்டுகளாக கலைஞருடனேயே இருக்கும் அவரது உதவியாளர் நித்யாவின் பேட்டி ஒன்றை ‘தமிழ் இந்து’ நாளேடு (ஜூலை 31, 2018) வெளியிட்டுள்ளது. அதில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.*

**“தலைவருக்குக் கடவுள் நம்பிக்கைக் கிடையாதுங்குறது எல்லோருக்கும் தெரியும். ஆனால் எனக்கு கடவுள் பக்தி உண்டு. ஒரு முறை நான் பக்கத்துல இருக்குற கோயிலுக்குப் போயிட்டு வந்து, தலைவருக்கு விபூதி குங்குமம் வெச்சி விட்டேன், அழிச்சிட்டாங்க. இந்த வைராக்கியம் இருக்கு பாருங்க தலைவரோட மனோ தைரியம் தான் அவரோட உயிர்” என்று கூறியிருக்கிறார்.**

*எம்.ஜி.ஆர். உடல்நலிந்தபோது பிரார்த்தனை சடங்குகள் தொடங்கி வைக்கப் பட்டன. அப்போதே ‘பிரார்த்தனை’ மோசடிகளைக் கண்டித்து பெரியார் இயக்கம் கூட்டங்களை நடத்தியது. ஜெயலலிதா அப்போலோ மருத்துவமனையில் இருந்தபோது மருத்துவமனை வளாகம் பஜனை மடமாக்கப்பட்டு அமைச்சர்கள் மொட்டை அடித்து, காவடி தூக்கி, மண் சோறு சாப்பிட்டு, கூத்து அடித்ததை நாடு பார்த்து கைகொட்டி சிரித்தது. தி.மு.க.விலும் அந்தக் கலாச்சாரத்தைப் புகுத்திட பார்ப்பன ஊடகங்கள், மதவாத சக்திகள் துடிப்பதாகத் தெரிகிறது. இதை தி.மு.க. தலைமை, குறிப்பாக செயல் தலைவர் மு.க. ஸ்டாலின், கனிமொழி, ஆ. ராசா போன்றவர்கள் ஊக்கப்படுத்த மாட்டார்கள் என்றே நம்புகிறோம். இந்த சடங்குகளை அனுமதிக்கவும் கூடாது.*

*ஒரு தலைவருக்குக் காட்டும் மரியாதை, அன்பு என்பது அவர் ஏற்றுக் கொண்ட இலட்சியங்களை மதிப்பதாகவே இருக்க வேண்டும்.*

### திராவிட இயக்க ஆய்வு நூல் கூறுகிறது

# அடக்கப்பட்ட சமூகத்தினரை அதிகாரத்தில் அமர்த்தியது திராவிட இயக்கம்

*1967 பொதுத் தேர்தலுக்குப் பிறகு தமிழ்நாட்டில் முதன்முறையாக மாநிலக் கட்சியொன்று ஆட்சியைப் பிடித்தது. முதலில் மாணவராகவும், பிறகு மாநில நிர்வாகத்தில் அதிகாரியாக இடம்பெற்றும் அப்போதைய மாற்றங்களை நேரிலேயே பார்த்தவர் எஸ்.நாராயண். “தமிழகத்தில் அரசியல் சித்தாந்தம் அரசின் கொள்கை யாகவும், திட்டங்களாகவும் மாற்றப்பட்டதால் மக்கள் பயன்பெற்றார்கள். அப்படிப்பட்ட மாற்றம் இந்தியாவில் வேறு எங்கும் நிகழவில்லை” என்று தன்னுடைய புதிய நூலில் எழுதியிருக்கிறார். ‘தி திரவிடியன் இயர்ஸ்: பாலிடிக்ஸ் அண்ட் வெல்ஃபேர் இன் தமிழ்நாடு’ என்ற அவருடைய நூலிலிருந்து சில பகுதிகள்:*

**அண்ணாவுக்குப் பிறகு**

*தமிழக முதலமைச்சராக இருந்த சி.என்.அண்ணா துரை 1969-ல் மறைந்தார். மு.கருணாநிதி முதலமைச்சராக அடுத்து பதவிக்கு வந்தார். இந்தியை எதிர்த்தவர்கள், டெல்லிக்கு எதிராக இயக்கங்கள் நடத்தியவர்கள், இளைஞர்கள், மெத்தப் படித்தவர்கள், ஆற்றொழுக்காக அடுக்கு மொழியில் பேசுகிறவர்கள் தமிழக அமைச்சரவையில் இடம்பெற்றனர். முந்தைய அரசுகளுக்கு இணையாக மட்டுமல்ல, அதைவிடச் சிறப்பாக மாநிலத்தின் வளர்ச்சிக்காகத் தங்களால் செயலாற்ற முடியும் என்ற நம்பிக்கையுள்ளவர்கள் அவர்கள். 1969 தொடங்கி 1976 வரையிலான அரசின் கொள்கைகள் அனைத்தும் இத்தகையோரின் கருத்துக் கலவைகளால் விளைந்தவை.*

*ஆள்பவர்களின் அரவணைப்பு, கட்சித் தொண்டர் களின் பங்களிப்பு ஆகியவை வளர்ச்சிக்கு உதவின. மக்களுடைய கோரிக்கைகளை ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதிகாரிகளிடம் வலியுறுத்தியதை இளம் அதிகாரியாகப் பலமுறை பார்த்திருக்கிறேன். இது முக்கியமான மாற்றம். அதற்கு முன்னால், ஊராட்சி ஒன்றியத் தலைவர் அதிகாரிகள் சூழ இருக்கும்போது வளர்ச்சித் திட்டங்களை அவர்களுடன் விவாதித் திருக்கிறேன். இப்போதோ பாசனத்துக்கான தண்ணீர், ரேஷன் அரிசி, பள்ளிக்கூடச் செயல்பாடுகள் ஆகியவை தொடர்பாக மாவட்ட, வட்ட கட்சி நிர்வாகிகள் அதிகாரிகளைச் சந்தித்து மக்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து நடவடிக்கைகளை எடுக்கவைத்தனர். மேல் அதிகாரிகள் வழிகாட்டுதலின் படி நடவடிக்கை எடுக்கும் வழக்கம் மாறி, ஆளும் கட்சி நிர்வாகிகள் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றத் தொடங்கினோம்.*

*சமுதாயப் படிநிலையில் முன்னேற நினைத்த குழுக்கள் உருவாகி ஆளும் கட்சியின் ஆதரவை நாடின. தொடக்ககாலத்தில் அவர்கள் மக்களுடைய குறைகளை மட்டுமே அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். ஏற்கெனவே இருந்த நிர்வாகச் சங்கிலித் தொடர்கள் மீறப்பட்டன. ஆண்டுகள் செல்லச்செல்ல இந்தக் குழுக்கள் தங்களுடைய கோரிக்கைகளை மாவட்ட நிர்வாகிகளிடம் வலியுறுத்தத் தொடங்கின. அரசு நிர்வாகத்துக்குக் கட்சித் தொண்டர்களிடமிருந்து கோரிக்கைகள் வருவது எப்போதாவது நிகழும் நிகழ்ச்சி என்பது மாறி, அன்றாட வழக்கமாகிவிட்டது. இதனால், மக்களுடைய கோரிக்கைகளும் குறைகளும் அரசு நிர்வாகத்தின் கவனத்தை உடனுக்குடன் ஈர்த்தன. அது ஒருவகையில் பின்னடைவாகவும் மாறியது.*

**மேலே வந்த கீழ்நிலைச் சமூகங்கள்**

*அரசு வேலைகளிலும் கட்சியிலும் கீழ்நிலைச் சமூகங்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் கிடைக்கத் தொடங்கியது. தமிழ்நாடு பொதுத் தேர்வாணையத்தின் தரவுகளின்படி 1960 தொடங்கி 1980 வரையிலான காலத்தில் அரசு வேலைக்கு வந்தவர்களின் சாதிப் பின்னணி அடியோடு மாறியிருந்தது. பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் அரசு வேலைகளைப் பெற்றனர். பிற்படுத்தப் பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியல் இனச் சாதிகள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் வேலைக்குச் சேர்ந்ததால் அதிகாரவர்க்கக் கட்டமைப்பே அடியோடு மாற்றம் கண்டது.*

*மக்கள்தொகையில் குறைவாக இருந்தாலும், அதற்குப் பொருத்தமில்லாத வகையில் அபரிமிதமாக அரசு வேலைகளைப் பிராமணர்கள் ஆக்கிரமித் திருந்த நிலை சீராக்கப்பட்டது. புதிய வேலை வாய்ப்புகளில், முற்பட்ட வகுப்பினரின் பிரதிநிதித்துவம் கணிசமாகக் குறைந்தது. அத்துடன் அரசு வேலையில் பிற்படுத்தப் பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக, அதுவரை அரசு வேலைக்கே வந்திராத பல சாதியினர் வேலைகளைப் பெற்றனர். இது அரசின் நிர்வாகத்தில் பன்மைத்துவத்தை வலுப்படுத்தியது. இது மிகமிக முக்கியமான மாற்றம்.*

*1925இல் நடந்த காஞ்சிபுரம் மாநாடு முதல் பெரியார் வலியுறுத்திவந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம், 1967இல் தொடங்கி வலுவாக அமலானது. திராவிடக் கட்சிகளின் எண்ணங்கள், லட்சியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏராளமான சாதிகளை, பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அரசு வேலையில் சேர்ந்தனர். இதனால், அரசு நிர்வாகத்தில் பிரதிநிதித்துவ சமநிலை ஏற்பட்டது. அதனால், சமூகநலத் திட்டங்களையும் சமூகங் களுக்குப் பலன் தரக்கூடிய சேவைகளையும் அடுத்தடுத்த அரசுகளால் வழங்க முடிந்தது. அரசு ஊழியர்களின் சமூகப் பிரதிநிதித்துவம், 1965-ல் நான் பணியில் சேர்ந்தபோது இருந்ததைப் போல அல்லாமல், தமிழ்நாட்டு மக்களின் அனைத்துத் தரப்பையும் நன்கு பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலேயே இருக்கிறது.*

*நான் அரசுப் பணியில் சேர்ந்தபோது மாவட்ட ஆட்சியரையும் மாவட்ட அரசு நிர்வாகங்களையும் சார்ந்துதான் எல்லாமே இருந்தன. அரசின் கொள்கைகளை அமல்படுத்தும் கரங்களாக ஆட்சியர்கள் இருந்தனர். காலனியாதிக்கக் காலத்திலிருந்து தொடர்ந்த அந்தப் பாரம்பரியம் அரசு நிர்வாகம் என்பதை அதிகார வர்க்கத்துக்குக் கட்டுப்பட்டதாக வைத்திருந்தது.*

**மாற்றிக் காட்டிய தமிழகம்**

*1967க்குப் பிறகு தமிழ்நாட்டில் நிலைமை மாறியது. மக்களோடு இணைந்து பல இயக்கங்களை நடத்திய, மக்களின் பேராதரவைப் பெற்ற கட்சியாக திமுக இருந்தது. எனவே, பதவியில் இருக்கும்போது மக்களுடைய கோரிக்கைகளைச் செவிமடுப்பதும் அவற்றை உடனுக்குடன் நிறைவேற்றுவதும் அவர்களுக்கு முக்கியமானதாக இருந்தது. திமுக கட்டுக்கோப்பான தொண்டர்களைக் கொண்ட ஜனநாயகக் கட்சியாக இருந்ததால் மாவட்டச் செயலாளர்களால் கட்சியின் உயர் தலைவர்களுடன் நேரடியாக எளிதில் தொடர்புகொள்ள முடிந்தது.*

*அன்றாட அரசு நிர்வாகம் தொடர்பாகக்கூட மாவட்ட ஆட்சியர்களுடன் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனை கலப்பது வழக்கமாகி விட்டது. மாவட்ட ஆட்சியர் பதவி அதிகாரம் மிக்கதாகவும், அனைவராலும் அடையப்பட வேண்டிய லட்சியப் பதவியாகவும் திகழ்ந்தது.*

*1971-க்குப் பிறகு திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இதுவும் மாறத் தொடங்கியது. கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்ததால், கட்சிக்குள்ளும் அரசு நிர்வாகத்திலும் தொண்டர் களின் கை ஓங்கியது. மாநில அரசின் வலுவான இரு கரங்களாக மாவட்ட ஆட்சியரும் ஆளும் கட்சியின் மாவட்டச் செயலாளரும் செயல்பட்டனர். அதிகாரிகளின் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் ஆகியவற்றில் மாநில அரசின் பங்களிப்போடு அரசியலுக்கும் முக்கிய செல்வாக்கு ஏற்படத் தொடங்கியது. இதனால், நிர்வாகம் அரசியல் மயமானது. இந்தக் காலத்தில்தான் அரசின் உயர் அதிகாரிகளில் பலர் ஓய்வு பெற்றனர், பலர் மத்திய அரசுப் பணிக்கு அயல்பணி அடிப்படையில் அனுப்பி வைக்கப்பட்டனர். மாநில அரசு நிர்வாகத்தின் அடித்தளத்தில் நிகழ்ந்த மாற்றங்கள் எளிதில் உணரக்கூடியதாக இருந்தது. அடுத்து அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தபோதும் இதுவே நடந்தது.*

**– ‘இந்து’ ஏட்டிலிருந்து**


“புரட்சிப் பெரியார் முழக்கம்”

**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.200**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
9841489896
newsdvk@gmail.com

## அறநிலையத் துறை முதல்முறையாக நியமனம்

# பார்ப்பனரல்லாதார் அர்ச்சகரானார்!

தமிழ்நாடு அறநிலையத்துறை நிர்வகிக்கும் மதுரை கோயில் ஒன்றில் பார்ப்பனரல்லாத ஒருவர் அர்ச்சகராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 2005 ஆம் ஆண்டு முதல்வராக கலைஞர் இருந்த காலகட்டத்தில்தான் தமிழகத்தில் பார்ப்பனரல்லாத பிற சாதியினருக்கும் அர்ச்சகர் பணி வழங்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 2007-08ஆம் ஆண்டு அனைத்து சாதியில் இருந்தும் 206 பேர் அர்ச்சகர் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டனர். அதில், ஒருவருக்கு பணி நியமனம் வழங்கப் பட்டுள்ளது. தமிழக அறநிலையத்துறைக்குச் சொந்தமான கோயிலில் பார்ப்பனரல்லாத ஒருவருக்கு அர்ச்சகர் பணி வழங்கப் படுவது இதுவே முதன்முறை.

இது குறித்து இந்து சமய அற நிலையத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், “ஒவ்வொரு கோயிலுக் கும் ஒரு ஆகமவிதி உள்ளது. அந்தக் கோயில்களின் ஆகமவிதிகளுக்குட் பட்டே அர்ச்சகர் நியமனம் நடை பெறும். கோயில் செயல் அதிகாரி நேர்காணல் கண்டு ஆகம விதிகளுக்குட்பட்டு அர்ச்சகர்களைத் தேர்வு செய்வார்கள். எந்தச் சாதியைச் சேர்ந்தவர்களும் பணிக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால், ஆகம விதிகளுக்குட்பட்டுதான் தேர்வு நடைபெறும்” என்றார்.

தமிழ்நாடு பயிற்சி பெற்ற அர்ச்சகர்கள் சங்கத் தலைவர் ரங்கநாதன், “ஏதோ ஒரு சிறிய கோயிலில் பார்ப்பனரல்லாதோர் அர்ச்சகராகப் பணிக்கு நியமிக்கப் பட்டால் மட்டும் போதாது. தமிழகத்தின் முக்கியமான பெரிய கோயில்களில் அனைத்து சாதி



யினரும் அர்ச்சகர் களாக நியமிக்கப் பட வேண்டும். அப்போதுதான் கோயில்களில் அர்ச்சகர் நியமனத் தில் நிலவும் சாதிய பாகுபாடு தீரும்” என்கிறார்.

1971இல் தமிழக சட்டமன்றத்தில் தந்தை பெரியார் கோரிக்கையை ஏற்று, முதல்வர் கலைஞர் அனைத்து ஜாதி யினரும் அர்ச்சகராவதற்கான ஒரு மசோதாவைக் கொண்டு வந்து ஒரு மனதாக நிறைவேற்றினார். தமிழகப் பார்ப்பனர்கள் அதை உச்சநீதிமன்றம் சென்று முடக்கினர்.

பிறகு 2006ஆம் ஆண்டு கலைஞர் முதல்வரானவுடன் இதே கோரிக்கைக்காக ஆணை பிறப் பித்தார். இதை எதிர்த்து தொடரப் பட்ட வழக்கில் 2015இல் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், ‘அனைத்து ஜாதி யினரும் அர்ச்சகராகலாம்; ஆனால் ஆகம விதிகள் அடிப்படை உரிமை’ என்று தீர்ப்பளித்தது. ஆகம விதிகள் பார்ப்பனர் அர்ச்சகராக இருக்கும் கோயில்களில் அவர்களே அர்ச்சகர் களாகத் தொடர வேண்டும் என்று கூறுகிறது.

இந்த நிலையில் பார்ப்பனரல்லாதார் அர்ச்சகராகக் கூடிய ஆக விதிகளுக்கு உட்படாத ஒரு கோயிலில் பார்ப்பன ரல்லாதார் ஒருவர் அர்ச்சகராக்கப் பட்டுள்ளார். இந்து அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள ஒரு கோயிலில் முதல்முறையாக துறை ரீதியாக இந்த நியமனம் நடந்திருக்கிறது என்பதும், அர்ச்சகர் பயிற்சி பெற்ற 206 பேரில் ஒருவர் தேர்வாகியுள்ளார் என்பதும் இப்போது கிடைத்துள்ள வெற்றியாகக் கருதலாம்.


நிமிர்வோம்

தடைகளைத் தகர்த்து...

அஞ்சல் வழியாக ‘நிமிர்வோம்’ இதழ் பெற வேண்டியவர்கள்
ஆண்டுக் கட்டணம்
ரூ.300 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

**பணவிடை அனுப்ப வேண்டிய முகவரி :**

‘நிமிர்வோம்’
29, பத்திரிகையாளர் குடியிருப்பு
திருவான்மியூர், சென்னை - 600 041.

**வங்கி வழியாக அனுப்ப:**

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’
கரூர் வைஸ்யா வங்கி
அடையாறு கிளை
நடப்புக் கணக்கு
(Current A/c)
வங்கிக் கணக்கு எண் : 1257115000002041
I.F.C. CODE : KVBL0001257

**தொடர்புக்கு:** 7299230363


## சத்தீஸ்கர் தேர்தல் வெற்றிக்காக மாந்திரீக பூஜை நடத்திய பா.ஜ.க.!

சத்தீஸ்கர் மாநிலத்தில் மீண்டும் ஆட்சியை பிடிப்பதற்காக, பாஜக தலைமை மாந்திரீக பூஜை நடத்தியிருப்பது தெரியவந்துள்ளது.சத்தீஸ்கர் மாநிலத்தில் 2018 நவம்பர் மாதம் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இங்கு ஏற்கெனவே பாஜக-தான் ஆட்சியில் உள்ளது. ராமன் சிங் என்பவர் முதல்வராக இருக்கிறார். இந்நிலையில் வரப்போகும் தேர்தலிலும் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதற்காக, மாந்திரீக பூஜை நடத்தியுள்ளனர். சட்டப்பேரவை அலுவலகத் திலேயே நடத்தப்பட்ட இந்த பூஜையில், முதல்வர் ராமன் சிங் மற்றும் பாஜக அமைச்சர்கள் பலர் கலந்து கொண்டதாக கூறப்படுகிறது.இது தற்போது சர்ச்சையாக மாறியிருக்கிறது. காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், ராமன் சிங் அரசுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.டிஜிட்டல் இந்தியா, ஸ்மார்ட் இந்தியா என்று பிரதமர் மோடி ஒருபுறம் பேசிக்கொண்டிருக்க, பாஜக-வினரோ இன்னும் மந்திரவாதியை விட்டு வருவதாக இல்லை என்று விமர்சனங்களும் எழுந்துள்ளன.ஆனால், மாந்திரீக பூஜையெல்லாம் நடக்கவில்லை என்றும், சட்டப் பேரவைக்கு வந்த மந்திரவாதி ராம்லால் காஷ்யப், பாஜக-வின் இளைஞரணி மண்டலத் தலைவராக இருப்பவர் என்றும் பாஜக-வினர் மழுப்பியுள்ளனர்

## மோடி சுற்றியது 84 நாடுகள்; ஆன செலவு ரூ.1,484கோடி!

பிரதமர் மோடி கடந்த 4 ஆண்டுகளில் 52 நாடு களுக்குசுற்றுப்பயணம் மேற்கொண்டதாகவும், இதற்காக ரூ. 355 கோடியே 78 லட்சம் செலவாகி இருப்பதாகவும் பிரதமர்அலுவலகம் கடந்த சில வாரங்களுக்கு முன்பு தெரிவித்திருந் தது. இந்நிலையில், மோடியின் வெளிநாட்டுப் பயணச் செலவுகள் குறித்த புதிய விவரங்கள் வெளியாகி யுள்ளன. இதுதொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வி.கே. சிங், நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில், பிரதமர் மோடி, 2014 முதல் கடந்த நான்காண்டுகளில் 84 நாடுகளை சுற்றி வந்திருப்பதாகவும், இதற்காக சுமார் ரூ. ஆயிரத்து 484 கோடி செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். கடந்த 2014 மே மாதம் முதல் இதுவரை பிரதமர் மோடி மொத்தம் 42 வெளிநாட்டுப் பயணங்களில் 84 நாடுகளை சுற்றி வந்துள்ளார். 2015-16இல் மட்டும் அதிகபட்சமாக 24 நாடுகளுக்கும், 2016-17இல் 18 நாடுகளுக்கும், 2017-18இல் 19 நாடுகளுக்கும் பயணம் செய்துள் ளார்.இதற்காக 2014-15இல் ரூ. 93 கோடியே 76 லட்சமும், 2015-16இல் ரூ. 117 கோடியும், 2016-17இல் ரூ. 76 கோடியே 27 லட்சமும், 2017-18இல் ரூ. 99 கோடியே 32 லட்சமும் செல விடப்பட்டு உள்ளது. அதாவது, 2014 ஜூன் 15 முதல்2018 ஜூன் 10 வரை பிரதமர் மோடி விமானத்தில் பய ணம் செய்த வகையில் ரூ. 387 கோடியே 26 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. வெளிநாடுகளுக்குப் பயணிக்கும் விமானத்தைப் பராமரிக்க கடந்த4 ஆண்டுகளில் ரூ. ஆயிரத்து 88 கோடியே 42 லட்சம் செலவாகியுள்ளது; பிரதமர் மோடி மற்ற நாடுகளின் தலைவர்களுடன் பேசுவதற்காகத் தனிப்பட்ட முறையில் அமைக்கப்பட்ட ஹாட்லைனுக்காக ரூ. 9 கோடியே 12 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது என்று வி.கே. சிங் தெரிவித்துள்ளார். இதனிடையே, மோடி சுற்றிப்பார்த்த நாடுகளின் எண்ணிக்கை, இன்னும் சில நாட்களில் 87 ஆக உயரப்போகிறது. அவர் ஜூலை 23 முதல் 27 வரை ஆப்பிரிக்க நாடுகளான உகாண்டா, தென்னாப் பிரிக்கா, ருவாண்டா ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருக்கிறார். எப்படி யும் ஆட்சி முடிவதற்குள் ‘சதம்’ அடித்து விடுவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

## பெண்களைப் புறக்கணிக்கும் அய்.அய்.டி. நிறுவனங்கள்

மாணவர்களைவிட மாணவிகள் பொது தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்றும், இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் (ஐஐடி) அவர்களது சேர்க்கை குறைவாக உள்ளது. இதனை அதிகரிக்க வேண்டும் என குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பேசினார்.

கோரக்பூர் ஐ.ஐ.டி.யில் நடைபெற்ற 64ஆவது பட்டமளிப்பு விழாவில் அவர் பேசியதாவது:

2017இல் ஐஐடி நுழைவுத் தேர்வு எழுதிய 1,60,000 பேரில் 30,000 பேர் மட்டுமே மாணவியர்.அதே ஆண்டில் ஐஐடி-யில் இளநிலை பட்டப் படிப்பில் சேர்ந்த 10,878 பேரில் 995 பேர் மட்டும் மாணவியர். பொது தேர்வுகளில் மாணவியர் அதிக மதிப்பெண் பெறுகின்றனர். கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களிலும், மாணவர்களைவிட மாணவியர் அதிக பதக்கங்களை வெல்லும் முனைப்பில் இருக்கிறார்கள். ஆனால் ஐஐடி-களில் சேரும் மாணவியர் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது.

கோரக்பூர் ஐஐடி-யில் மொத்தம் 11,653 பேர் சேர்ந்துள்ளனர். இதில் 1,925 பேர் மட்டுமே மாணவிகள். இது 16 சதவீதத்துக்கும் சற்று அதிகம். இந்த நிலை மாற வேண்டும். பெண்களை உயர்கல்வி படிப்புகளில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களில் அதிகஅளவில் ஈடுபடுத்த வேண்டும். இந்த செயலை செய்யாவிடில் சமூகத்தில் பெண்களின் நிலையை மேம்படுத்த முடியாது. இது சமூகத்தில் ஆண்-பெண் சமத்துவத்தை கடினமாக்குவதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கும்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## 6 ஊர்களிலிருந்து புறப்பட்டு 175 ஊர்களில் பரப்புரை

# திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் ‘கல்வி உரிமை பரப்புரை’ப் பயணம்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் கல்வி உரிமை பரப்புரைப் பயணம் ஆகஸ்டு 20இல் தொடங்கி ஆக.26இல் முடிவடைகிறது. சென்னை, குடியாத்தம், சங்கரன் கோயில், மேட்டூர், மயிலாடுதுறை, திருப்பூர் ஆகிய 6 ஊர்களிலிருந்து பயணக் குழுக்கள் தனித் தனியாகப் புறப்பட்டு பெரம்பூர் வந்து சேருகின்றன. பெரம்பூரில் பயண நிறைவு விழா மாநாடாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில் தொடங்கிய தமிழ் நாட்டின் ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி வேலை வாய்ப்பு எனும் சமூக நீதித் திட்டங்கள் தமிழகத்தை இந்தியா விலேயே முதன்மை மாநிலமாகக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. இந்த நிலையில் தமிழகக் கல்வி உரிமையில் நடுவண் கட்சியின் குறுக்கீடுகள் தமிழகம் கட்டி எழுப்பிய சமூக நீதிக் கட்டமைப்பைக் குலைத்து வருவ தோடு வேலை வாய்ப்புகளிலும் வட மாநிலத்தவரைக் குவித்து வருகிறது. இதை மக்களிடம் எடுத்துச் சொல்லி விழிப்புணர்வை உருவாக்குவதே இப் பயணத்தின் நோக்கம். மொத்தம் 140 ஊர்களில் பரப்புரை நடக்கிறது. தோழர்கள் பயணத்துக்கு தயாராகி வருகிறார்கள்.

பயணக் குழுவின் - பயணத் திட்டம் கீழ்க்கண்டவாறு வகுக்கப்பட்டுள்ளது.

**குடியாத்தம் குழு**

*21.08.2018* - காலை துவக்கம் குடியாத்தம் - கே.வி. குப்பம், லத்தேரி, காட்பாடி, சேன்பாக்கம் (வேலூர்) - இரவு தங்கல்

*22.08.2018* - பூட்டுத்தாக்கு, மேல் விசாரம், மாம்பாக்கம், திமிரி, அகரம், கலவை - இரவு தங்கல்

*23.08.2018* - அணைக்கட்டு, தேவிசெட்டிகுப்பம், ஒடுக்கத்தூர் (திருப்பத்தூர்) - இரவு தங்கல்

*24.08.2018* - ஊத்தங்கரை, மத்தூர், கிருட்டிணகிரி, காவேரிப்பட்டினம், பையூர், காரியமங்கலம் - இரவு தங்கல்

*25.08.2018*- தருமபுரி, மூக்கனூர், கடத்தூர், பொம்மிடி, பாப்பிரெட்டி பட்டி, வலசையூர், காரியப்பட்டி, ஆத்தூர் - இரவு தங்கல்

*26.08.2018* - தலைவாசல், இலுப்ப நத்தம், வீரகனூர், எசனை, வடகுமரி, பெரம்பலூர் பயண நிறைவு.

ஒருங்கிணைப்பாளர்கள்: குடியாத்தம் சிவா, மேட்டூர் பரத்

**சங்கரன் கோயில் குழு**

*21.08.2018* - காலை துவக்கம் - சங்கரன் கோயில், இராஜபாளையம், திருவில்லிப்புத்தூர், சிவகாசி, விருதுநகர் - இரவு தங்கல்

*22.08.2018* - கள்ளிக்குடி, சிவரக் கோட்டை, திருமங்கலம், திருப்பரங் குன்றம், புதூர், மதுரை - இரவு தங்கல்

*23.08.2018* - மேலூர், மேலவளவு, S.S. கோட்டை, சிவகங்கை, நாட்டரசன் கோட்டை, காளையார் கோயில் - இரவு தங்கல்

*24.08.2018* - கள்ளல், காரைக்குடி - இரவு தங்கல்

*25.08.2018* - கண்டனூர், புதுவயல், திருமயம், நமணசமுத்திரம், கறம்பக் குடி - இரவு தங்கல்

*26.08.2018* - கீரனூர், குண்டூர், திருச்சி, பெரம்பலூர் - பயண நிறைவு

ஒருங்கிணைப்பாளர்கள் : பால் வண்ணன், நாத்திக ஜோதி, பவானி வேணுகோபால்

**மேட்டூர் குழு**

*20.08.2018* - காலை 9-00 மணி - மேச்சேரி, 11 மணி - மல்லிகுந்தம், 12 மணி - பொட்டனேரி, மாலை 7 மணி -கொளத்தூர் பொதுக்கூட்டம்

*21.08.2018* - காலை 10 மணி- இராமன் நகர், 11.30 மணி- புதுச்சாம்பள்ளி, மாலை 4.30 மணி - தங்கமாபுரி பட்டிணம், இரவு - 7 மணி - மேட்டூர் ஆர்.எஸ் பொதுக்கூட்டம்

*22.08.2018* - காலை 9 மணி - பூலாம்பட்டி, 11 மணி - சித்தூர், மதியம் 1 மணி - எடப்பாடி, மாலை 4 மணி - தேவூர், மாலை 7 மணி - குமாரபாளையம் - இரவு தங்கல்

*23.08.2018* - காலை 9 மணி - குமாரபாளையம், காலை 10.30 - காளிங்கண்நாயன்பாளையம், மாலை 4 மணி - கிருஷ்ணம்பாளையம், மாலை 7 மணி - பள்ளிபாளையம் - பொதுக்கூட்டம்

*24.08.2018* - காலை 9 மணி - வெப் படை, காலை 11 மணி - தேவனாங் குறிச்சி, மாலை - திருச்செங்கோடு - இரவு தங்கல்

*25.08.2018* - காலை 9 மணி - கோழிக்கால் நத்தம், காலை 11 மணி - காளிப்பட்டி, மதியம் 12 - ஆட்டை யாம்பட்டி, மாலை - இராசிபுரம் - இரவு தங்கல்

*26.08.2018* - காலை 9 மணி - நாமகிரிப்பேட்டை, காலை 11 மணி - தம்மம்பட்டி, மதியம் 12.30 - கங்க வள்ளி, மாலை 4 மணி - வீரகனூர், பெரம்பலூர் - பயண நிறைவு

ஒருங்கிணைப்பாளர்கள் : சி. கோவிந்தராஜ், மேட்டூர் சக்திவேலு

**மயிலாடுதுறை குழு**

*20.08.2018* - காலை துவக்கம் - மயி லாடுதுறை, மணல்மேடு, குத்தாலம், மயிலாடுதுறை - இரவு தங்கல்

*21.08.2018* - செம்பனார் கோயில், காரைக்கால், நாகப்பட்டினம், திருவாரூர் - இரவு தங்கல்

*22.08.2018* - திருவாரூர், லெட்சு மாங்குடி, மன்னார்குடி, மன்னார்குடி - இரவு தங்கல்

*23.08.2018* - நீடாமங்கலம், நாச்சி யார் கோயில், கும்பகோணம் - இரவு தங்கல்

*24.08.2018* - பாபநாசம், அய்யம் பேட்டை, தஞ்சாவூர் - இரவு தங்கல்

*25.08.2018* - திருவையாறு, திருகாட்டுப்பள்ளி, காட்டூர், திருச்சி - இரவு தங்கல்

*26.08.2018* - சமயபுரம், பாடாலூர், பெரம்பலூர் - பயண நிறைவு

ஒருங்கிணைப்பாளர்கள் : நா. இளைய ராசா, மகேஷ்

**சென்னை குழு**

*20.08.2018* - காலை துவக்கம் - நங்கை நல்லூர், மடிப்பாக்கம், கோவிலம்



பாக்கம், சேலையூர் - இரவு தங்கல்

*21.08.2018* - கண்டிகை, கூடுவாஞ் சேரி, மறைமலைநகர், செங்கற்பட்டு - இரவு தங்கல்

*22.08.2018* - மதுராந்தகம், கீழ் கொடுங்காலூர், திண்டிவனம், நாட்டார்மங்கலம் - இரவு தங்கல்

*23.08.2018* - செஞ்சி, நேம்பூர், கஞ்சனூர், விழுப்புரம் - இரவு தங்கல்

*24.08.2018* - உளுந்தூர்பேட்டை, மங்களம்பேட்டை, விருதாச்சலம், கருவேப்பளங்குறிச்சி - இரவு தங்கல்

*25.08.2018* - பெண்ணாடம், திட்டக்குடி, தொழுதூர், லப்பக்குடி காடு - இரவு தங்கல்

*26.08.2018* - மங்களமேடு, வாலி கண்டபுரம், பெரம்பலூர் கூட்டுச் சாலை, பெரம்பலூர் - பயண நிறைவு

ஒருங்கிணைப்பாளர்கள் : இரா. உமாபதி, ந. அய்யனார்

**திருப்பூர் குழு**

*21.08.2018* - காலை 19-00 மணி - திருப்பூர் பெரியார் சிலை - 11 மணி - அவினாசி, 12 30 மணி - கருவலூர், மாலை 3 மணி - அன்னூர், மாலை 5 மணி - மேட்டுப்பாளையம், இரவு தங்கல்

*22.08.2018* - காலை10.30மணி - சிறுமுகை, 12.30மணி - இரும்பொறை, மாலை 3.45 மணி - திருமலை கவுண்டம் பாளையம், மாலை 5.15 மணி - சேவூர், மாலை 6.45 மணி - 15 வேலம்பாளையம், மாலை 8 - அனுப்பர் பாளையம் - இரவு தங்கல்

*23.08.2018* - காலை 10 மணி - திருப்பூர் புதிய பேருந்து நிலையம், காலை 11.30 - நல்லூர், மதியம் 12.45 - செட்டிப்பாளையம், மதியம் 01.45 - வீரபாண்டி, மாலை 3.30 மணி - பல்லடம், மாலை 5.30 - குடிமங்கலம், இரவு 8 மணி - உடுமலை.

*24.08.2018* - காலை 9 மணி - கடத்தூர், காலை 10.15 மணி கணியூர் - பேருந்து நிறுத்தம், காலை 11.45 - மடத்துக்குளம், மாலை 3.30 - குமரலிங்கம், மாலை 5.15 - பாப்பம்பட்டி, மாலை 6.30 - நெய்க் காரம்பட்டி, இரவு 8 - பழனி பெரியார் சிலை

*25.08.2018* - காலை 9 மணி - ஆயக்குடி, காலை 10.30 - ஒட்டன் சத்திரம், மதியம் 1 - திண்டுக்கல், மாலை 3.30 - திண்டுக்கல் பேருந்து நிலையம், மாலை 7.15 - வையம்பட்டி, இரவு 8.30 - மணப்பாறை

*26.08.2018* - காலை 10 மணி - தோக மலை, காலை 11மணி - குளித்தலை, மதியம் 12.30 - முசிறி - பெரம்பலூர் - பயண நிறைவு.

ஒருங்கிணைப்பாளர்கள் : சூலூர் பன்னீர்செல்வம், கோவை நிர்மல் குமார்

– தலைமைக் கழகம்

## பெரம்பலூரில் கழக சுவரெழுத்து







Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 3rd August 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN